பாலியல் வழக்கில் சிறுமிக்கு நிதி அளிப்பதில் தாமதம்

உள்துறைச் செயலருக்கு ரூ.10 ஆயிரம் அபராதம்

மதுரை, செப். 22: பாலியல் வன்கொடுமை வழக்கில் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு நிதியுதவி வழங்க தாமதம் செய்த தமிழக உள்துறைச் செயலருக்கு ரூ. 10 ஆயிரம் அபராதம் விதித்து, சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை வெள்ளிக்கிழமை உத்தரவிட்டது.

ராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி பகுதியைச் சேர்ந்த பெண் தாக்கல் செய்த மனு:

நாங்கள் பட்டியல் இன சமூகத்தைச் சேர்ந்தவர்கள். எனது கணவர், மூன்று குழந்தைகளுடன் தவளைக்குளம் பகுதியில் வசித்து வந்தோம். கடந்த டிசம்பர் 2020–ஆம் ஆண்டு எங்களது பகுதியில் வசிக்கும் வேலுச்சாமி, எனது 7 வயது மகளுக்கு பாலியல் தொந்தரவு அளித்து வந்தார்.

இதுகுறித்து பரமக்குடி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்ததின் பேரில், போக்ஸோ வழக்கில் அவர் கைது செய்யப்பட்டார்.

ராமநாதபுரம் மாவட்ட சிறப்பு போக்ஸோ நீதிமன்றத்தில் நடைபெற்ற இந்த வழக்கில், குற்றஞ்சாட்டப்பட்ட வேலுச்சாமிக்கு 7 ஆண்டுகள் சிறைத் தண்டனையும், பாதிக்கப்பட்ட எனது மகளுக்கு ஒரு லட்ச ரூபாய் நிதியுதவியும் வழங்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

ஆனால், நிதியுதவி வழங்கப்படவில்லை. இதுகுறித்து ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர், தமிழக உள்துறைச் செயலருக்கு மனு அனுப்பினோம். இதுவரை எந்த நடவடிக்கையும் இல்லை.

எனவே, வறுமையில் வாடும் எனது குடும்பத்துக்கு கீழமை நீதிமன்ற உத்தரவுப்படி நிதியுதவி வழங்க உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என அவர் கோரியிருந்தார். இந்த மனு உயர்நீதிமன்ற நீதிபதி புகழேந்தி முன் வெள்ளிக்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது, மனுதாரர் தரப்பில் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு விரைந்து நிதியுதவி கிடைக்க உத்தரவிட வேண்டும் என வாதிடப்பட்டது.

இதையடுத்து, நீதிபதி புகழேந்தி பிறப்பித்த உத்தரவு:

போக்ஸோ வழக்கில் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு உதவித்தொகை வழங்க கீழமை நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்து ஓராண்டாகியும் இதுவரை உதவித்தொகையை வழங்கவில்லை. இது ஏற்கத்தக்கது அல்ல.

எனவே, பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 6 சதவீத வட்டியுடன் உடனடியாக உதவித்தொகையை வழங்க வேண்டும். மேலும், உதவித்தொகை வழங்குவதில் கால தாமதம் செய்த தமிழக உள்துறைச் செயலர் பி. அமுதாவுக்கு ரூ.10 ஆயிரம் அபராதம் விதிக்கப்படுகிறது. இந்த அபராதத் தொகையையும் சேர்த்து சிறுமிக்கு வழங்க வேண்டும். வழக்கு முடித்து வைக்கப்படுகிறது என்றார் நீதிபதி.

கோவையில் போட்டி: கமல்ஹாசன் சூசகம்

கோவை, செப். 22: வரும் மக்களவைத் தேர்தலில் கோவை தொகுதியில் போட்டியிட உள்ளதாக மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கமல்ஹாசன் சூசகமாகத் தெரிவித்தார்.

மக்களவைத் தேர்தல் தொடர்பாக மக்கள் நீதி மய்யத்தின் கோவை மண்டல நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் கோவையில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதில் பங்கேற்பதற்காக அந்தக் கட்சியின் தலைவர் கமல்ஹாசன் தனி விமானம் மூலம் கோவை வந்தார். விமான நிலையத்தில் அவருக்கு தொண்டர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

இதைத் தொடர்ந்து, ஒரு தனியார் அரங்கில் கட்சி நிர்வாகிகளுடன் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் கமல்ஹாசன் பங்கேற்றார்.

அப்போது அவர் பேசியதாவது:

சமுதாயத்துக்காக கடைசிவரை வாழ்ந்தவர் பெரியார் ஈ.வெ.ரா. திமுகவோ, வேறு எந்தக் கட்சியோ மட்டும் அவரை சொந்தம் கொண்டாட முடியாது. இந்த வயதில் அரசியலுக்கு வந்ததற்கு நான் மன்னிப்பு கேட்கவேண்டும். கருணாநிதி திமுகவுக்கு வருமாறு என்னை அழைத்த போதே, நான் கம்யூனிஸ்ட் அல்லது காங்கிரஸ் கட்சியில் சேரப் போவதாக சொல்லியிருக்க வேண்டும். அப்போதே அரசியலில் இறங்கி இருக்க வேண்டும்.

கோவையில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற மண்டல நிர்வாகிகள் ஆலோசனை கூட்டத்தில் பேசுகிறார் மக்கள் நீதி மய்யம் கட்சித் தலைவர் கமல்ஹாசன்.

கடந்த சட்டப்பேரவை தேர்தலில் நான் வெற்றிபெறாதபோதும் நெஞ்சை நிமிர்த்தி நடந்தேன். மக்கள் வாக்களித்தும், பிறர் நம்மை ஏமாற்றி விட்டனர். மீண்டும் நாம் சூழ்ச்சிக்கு ஆளாகக் கூடாது.

மநீமவை பொருத்தவரை கோவை, சென்னை, மதுரை என வெவ்வேறு இடங்களில் இருந்து போட்டியிட எனக்கு அழைப்பு வருகிறது.

தலைவனால் இயலாததை தொண்டனிடம் சொல்லக் கூடாது. போர்ப் படையில் முன்னால் நிற்பவர் பயப்படக் கூடாது, நான் நிற்பேன். என்னை காயப்படுத்தினாலும், மருந்திட்டுக் கொண்டு கோவையில் திரும்ப வந்து நிற்கிறேன்.

தேர்தலில் 40 தொகுதியிலும் வேலை செய்ய தயாராக வேண்டும். தமிழகம் முழுவதற்கும் நல்ல தலைமை வரவேண்டும். நேர்மைக்கு எல்லா இடங்களிலும் மரியாதை உள்ளது. அவர்களே நம்மை அழைப்பார்கள்.

முதியவர்கள், புதியவர்களுக்கு இடமளிக்க வேண்டும். கட்சியில் பதவி நிரந்தரம் இல்லை; உறவுதான் நிரந்தரம். ஒரே தேர்தல், ஒரே தலைமை என்பதை ஏற்க முடியாது. 8 கோடி பேர் சேர்ந்து தமிழகத்தை காப்பாற்ற வேலை செய்தாலே தமிழ் நாடு முதன்மை மாநிலமாகிவிடும் என்றார் அவர்.

39 தொகுதிகளிலும் பாஜக கூட்டணி வெற்றி பெறும்

திருப்பூர், செப். 22: வரும் மக்களவைத் தேர்தலில் தமிழகத்தில் 39 மக்களவைத் தொகுதிகளிலும் பாஜக கூட்டணி வெற்றி பெறும் என்று பாஜக மாநிலத் தலைவர் கே.அண்ணாமலை கூறினார்.

கோவை மாவட்டம் மடத்துக்குளம் சட்டப் பேரவைத் தொகுதி, கொழுமத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற 'என் மண் என் மக்கள்' நடைப்பயணத்தில் பங்கேற்ற கே.அண்ணாமலை சுமார் 3 கி.மீ. நடைப்பயணம் மேற்கொண்டார். குமரலிங்கம் பேருந்து நிலையம் அருகே அவர் பேசியதாவது:

உலக அளவில் தற்போது 5–ஆவது வளர்ச்சியடைந்த நாடாக இந்தியா உள்ள நிலையில், வரும் 2028 ஆம் ஆண்டுக்குள் மூன்றாவது வளர்ச்சியடைந்த நாடாக பிரதமர் மோடி மாற்றிக் காட்டுவார். 'இந்தியா' கூட்டணியில் யார் பிரதமர் வேட்பாளர் என்பதை அறிவிக்க முடியாமல் குழப்பம் நீடித்து வருகிறது. வரும் மக்களவைத் தேர்தலில் பாஜக கூட்டணி 400 தொகுதிகளிலும், தமிழகத்தில் 39 தொகுதிகளிலும் உறுதியாக வெற்றி பெறும் என்றார்.

மது குடித்த இருவர் மர்மமாக உயிரிழப்பு

கும்பகோணம், செப். 22: கும்பகோணத்தில் மது குடித்த இரு தொழிலாளர்கள் வெள்ளிக்கிழமை மர்மமான முறையில் இறந்தனர்.

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் பெருமாண்டி பகுதியைச் சேர்ந்த கட்டடத் தொழிலாளர்கள் எம்.பாலகுரு (48), இவரது நண்பரான கர்ணகொல்லை தெருவைச் சேர்ந்த டி. சௌந்தரராஜன் (43) ஆகிய இருவரும் வழக்கம்போல வியாழக்கிழமை இரவு வேலை முடிந்த பிறகு மேலக்காவேரி பகுதியிலுள்ள காவிரி ஆற்றின் சக்கரப் படித்துறையில் மது குடிப்பதற்காகச் சென்றனர்.

இந்த நிலையில், இருவரும் சக்கரப் படித்துறையில் வெள்ளிக்கிழமை உயிரிழந்து கிடப்பதாக காவல் துறைக்கு அந்தப் பகுதி மக்கள் அளித்த தகவலின் பேரில், கும்பகோணம் காவல் துணைக் கண்காணிப்பாளர் ஜி. கீர்த்திவாசன், ஆய்வாளர் ராஜா, உதவி ஆய்வாளர் சத்யா உள்ளிட்டோர் நிகழ்விடத்துக்குச் சென்று இருவரது சடலங்களையும் கைப்பற்றி உடற்கூறாய்வுக்காக கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும், தடயவியல் நிபுணர்கள் நிகழ்விடத்தில் கிடந்த ரத்த மாதிரிகள், பாட்டில்கள் உள்ளிட்டவற்றை சேகரித்து ஆய்வுக்காகக் கொண்டு சென்றனர்.

போலீஸார் நடத்திய விசாரணையில், நிகழ்விடத்தில் 4 பேர் மது அருந்தியிருப்பதும், அவர்களில் பாலகுருவும், சௌந்தரராஜனும் நள்ளிரவில் வயிற்று வலியால் தொடர்ந்து சப்தம் போட்டுக் கொண்டிருந்ததும் தெரிய வந்தது.

நிகழ்விடத்தில் மதுபாட்டில்களுடன் 'சானிடைசர் பாட்டில்களும்' கிடந்ததால், போதைக்காக மதுவில் 'சானிடைசர்' கலந்து குடித்தனரா? அல்லது வேறு யாரும் கலந்து கொடுத்தனரா? என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கும்பகோணம் கிழக்கு காவல் நிலையத்தினர் வழக்குப் பதிந்து விசாரிக்கின்றனர்.

இந்நிலையில், இவர்களுடன் மது அருந்திய துக்காம்பாளைய தெருவைச் சேர்ந்த ஜெ. ஜெயகிருஷ்ணன் (38) உடல் நலக்குறைவு காரணமாக கும்பகோணம் அரசு மருத்துவமனையில் வெள்ளிக்கிழமை மாலை சேர்க்கப்பட்டார்.

காவிரி: செப்.27–இல் தேமுதிக உண்ணாவிரதப் போராட்டம்

சென்னை, செப்.22: காவிரி விவகாரத்தில் கர்நாடக அரசைக் கண்டித்து செப்டம்பர் 27–இல் தேமுதிக சார்பில் தஞ்சாவூரில் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெறும் என்று அக் கட்சியின் தலைவர் விஜயகாந்த் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெள்ளிக்கிழமை வெளியிட்ட அறிவிப்பு:

காவிரி நீரை திறந்துவிடாமல் தமிழகத்தை கர்நாடகம் வஞ்சிக்கிறது. தண்ணீர் இல்லாததால் டெல்டா மாவட்டங்களில் நெற்பயிர்கள் கருகும் நிலை ஏற்பட்டுள்ளது.

மத்திய, மாநில அரசுகள் தமிழகத்துக்கான தண்ணீரைப் பெற்றுத் தருவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கவில்லை.

இதைக் கண்டித்து தேமுதிக சார்பில் தஞ்சாவூர் பேருந்து நிலையம் அருகில் செப்டம்பர் 27–இல் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெறும் என்று அவர் கூறியுள்ளார்.

ரயில் முன் பாய்ந்து காவலர் தற்கொலை

சாத்தூர், செப். 22: விருதுநகர் மாவட்டம், சாத்தூர் அருகே வியாழக்கிழமை இரவு ரயில் முன் பாய்ந்து ரயில்வே பாதுகாப்புப் படை தலைமைக் காவலர் தற்கொலை செய்து கொண்டார்.

சாத்தூர் அருகே உள்ள சின்னக் கொல்லப்பட்டி பகுதியில் ரயில்வே தண்டவாளத்தில் வெள்ளிக்கிழமை காலை ஆண் சடலம் கிடந்தது.

விசாரணையில், அவர் ரயில்வே பாதுகாப்புப் படையில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்த சொக்கலிங்க பாண்டியன் (49) என்பது தெரிய வந்தது. இவர் செங்கோட்டையில் பணியாற்றி வந்ததும், இவருக்கு 2 குழந்தைகள் இருப்பதும், குடும்பத் தகராறு காரணமாக மனைவியைப் பிரிந்து வாழ்ந்து வந்ததும் தெரியவந்தது.

இந்த நிலையில், இவர் செந்தூர் விரைவு ரயில் முன் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டார். தற்கொலைக்கு காரணம் குறித்து ரயில்வே போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

வியாழக்கிழமை மதுரை அருகே தேனூரில் ரயில் முன் பாய்ந்து ரயில்வே பெண் காவலர் ஜெயலட்சுமி தனது 2 குழந்தைகளுடன் தற்கொலை செய்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

SOUTHERN RAILWAY

Construction Organization
Egmore, Chennai - 600 008
NOTIFICATION

Online applications are invited from interested candidates for engagement of Junior Technical Associate (JTA) on contract basis in Civil Engineering Department in Southern Railway, Construction Organization, Chennai from open market.

No. of posts: 14
(07 UR, 02 SC, 01 ST, 03 OBC-NCL, 01 EWS)

Please visit **https://sr.indianrailways.gov.in->News&Updates->Construction Organization** for detailed notification, annexures and payment details.

Details of monthly remuneration/ allowances are available in the notification published in the above website.

Last date for submission of application: 09.10.2023.

Senior Personnel Officer
Construction, Egmore, Chennai

Follow us on : twitter.com/GMSRailways

பாரத ஸ்டேட் வங்கி
தமிழர் உடன் முதல் செல்வாட்டு வரை

(RACPC-ஐயப்பன்தாங்கல்), எண்.50, AR பிளாசா, மவுண்ட் பூந்தமல்லி நெடுஞ்சாலை, ஐயப்பன்தாங்கல், சென்னை-600 056. போன்:2627 9292 மின்னஞ்சல்: sbi.17938@sbi.co.in

மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு

கடன்தாரரின் பெயர் : திரு.B.ஜோதி
வாகன பதிவு எண் : TN 21 BF 2799
தயாரிப்பு/மாடல் : HONDA AMAZE 1.5 S O MT
குறைந்த பட்ச விலை:ரூ.3,40,000/- (GST @ 18% applicable) டேவணித்தொகை:ரூ.34,000/-

விற்பனை விபரம்:

மின்னணு ஏலம் நடைபெறும் நாள் & நேரம்:	12.10.2023 காலை 11.00 மணிமுதல் மதியம் 12.00 மணிவரை; ஏலம் முடியும் வரை 5 நிமிடங்கள் கால அவகாசம் தொடர்ந்து தானாகவே நீடிக்கப்படும்
டேவணித் தொகை செலுத்தும் முறை:	EMD-ஐ டிமாண்ட் டிராஃப்ட் மூலமாக State Bank of India, RACPC Ayyappanthangal என்ற பெயரில் செலுத்த வேண்டும்.
விலைக் குறிப்பீட்டுத் தொகையை உயர்த்திக் கோரும் அளவு	ரூ.3,000/-
வாகனங்களை பார்வையிடும் தேதி:	07.10.2023-காலை 11.00 மணி முதல் மாலை 04.00 மணிவரை;
ஆன்லைனில் டேவணித்தொகையுடன் விலைப்புள்ளிகள் சமர்ப்பிக்க:	10.10.2023 மாலை 04.00 மணி வரை

மேலும் வாகனத்தினை பார்வையிடும் நேரம் / இ-ஏலம் மற்றும் இதர விவரங்களையும் நிபந்தனைகளையும் அறிய விரும்பும் விலைக் குறிப்பீட்டாளர்கள், உதவிப்பொது மேலாளர், பாரத ஸ்டேட் வங்கி, RACPC-ஐயப்பன்தாங்கல், எண்.50, AR பிளாசா, மவுண்ட் பூந்தமல்லி நெடுஞ்சாலை, ஐயப்பன்தாங்கல், சென்னை-600 056, போன்:044-26792921, என்ற முகவரியில் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளலாம் அல்லது SM அசோசியேட்ஸ்: திரு.நிக்சன்-9384381953 அவர்களை தொடர்பு கொள்ளலாம் அல்லது வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட சேவை முகவரான M/s.C1 India Pvt. Ltd. (தொடர்பு கொள்ள வேண்டிய நபர்-திரு.பிரபாகரன்-7418281709), https://bankeauction.com, tn@c1india.com, support@bankeauction.com-ல் தொடர்பு கொள்ளலாம்.

இடம்: சென்னை. அதிகாரப்பூர்வ அதிகாரி,
தேதி:22.09.2023 பாரத ஸ்டேட் வங்கி, RACPC-ஐயப்பன்தாங்கல், சென்னை.

தமிழ்நாடு கனிம நிறுவனம்
எண்.31, காமராஜர் சாலை, கோட்டூர்புரம், சென்னை-600085.
தொலைபேசி: 044-25862018, 25811872
இ-ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலம்

1	திட்டத்தின் பெயர்	பயனீட்டு நிறுவனத்திற்குட்பட்ட சில குவாரிகளில் உறுதி செய்யப்படும் கனிம / மணல் வண்ண கிராவல், கற்றுண், கனிம விற்பனை
2	ஒப்பந்தப்புள்ளி எண் / நாள் ஒப்பந்தப்புள்ளி ID எண்	1335/இக்கண-1/2023, நாள்: 21.09.2023 1. 2023_TNMIN_372046_1, 2. 2023_TNMIN_372073_1 3. 2023_TNMIN_372090_1, 4. 2023_TNMIN_372100_1 5. 2023_TNMIN_372109_1
3	இ-ஒப்பந்தப்புள்ளி நாளதில் ஒப்பந்தப்புள்ளி படிவம் வாங்கிக் கேண்டிய கடைசி நாள்	20.10.2023 பிற்பகல் 4.00 மணி வரை
4	இ-ஒப்பந்தப்புள்ளி நாளதில் தொழில் நுட்ப ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள்	23.10.2023 பிற்பகல் 4.00 மணி
5	ஒப்பந்தப்புள்ளி படிவம் விலை & முன்வைப்புத் தொகை	ரூ.2,000/- தனியே USD 25 இந்தியர் நாடு தவிர்த்தவர்கள் ரூ.5,90,000/- தனியே USD 7200 (ஒவ்வொரு குவாரிக்கும்)

குறிப்பு: மேலும் விவரங்களுக்கு Tamilnadu e-tendering portal https://tntenders.gov.in இணையதளத்தை பார்வையிடவும்
பொது மேலாளர் (நிதி)

மதுரவாயல் II கிளை
எண்.123, மேட்டுக்குப்பம் மெயின் ரோடு, மதுரவாயல், சென்னை - 600 095 Ph.: 94441 44000
E mail- cb16046@canarabank.com

Canara Bank கனரா வங்கி

அசையா சொத்து சுவாதீன அறிவிப்பு [SECTION 13(4)]

பிணைக்காப்பு, நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்கச் சட்டம். 2002 மற்றும் பிணைக்காப்பு (செயலாக்க) விதிகள். 2002 ன் (Securitisation and Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest Act, 2002) (Act 54 of 2002) (hereinafter referred to as "the Act") மற்றும் விதி 3ன்படி (Security Interest (Enforcement) Rules, 2002) கீழ் **கனரா வங்கியின், அதிகாரம்பெற்ற அதிகாரியாக** நியமிக்கப்பட்டவரான கீழே கையொப்பமிட்ட அதிகாரி மூலம், மேற்படி சட்டத்தின் பிரிவு 13(12)-ன் கீழ் **கடன்தாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்கள்: Mr.N.சம்பத்குமார்,** S/o.நடராஜன், **Mr.N.கார்த்திக்,** S/o.நடராஜன், **இருவரது முகவரி,** மனை எண்.38, சூர்யநாராயணா நகர், திருவேற்காடு கிராமம், பூந்தமல்லி தாலுகா, திருவள்ளூர் ஆகியோருக்கு 13.07.2023 தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட கடன் தொகையான ₹ **10,17,572.42** (ரூபாய் பத்து லட்சத்து பதினேழாயிரத்து ஐநூற்று எழுபத்திரண்டு மற்றும் பைசா நாற்பத்திரண்டு மட்டும்)-ஐ அறிவிப்பு பெற்ற அறுபது நாட்களுக்குள் திரும்ப செலுத்த வேண்டுமென்று அறிவிப்பு அனுப்பப்பட்டது.

கடன்தாரர்/ஜாமீன்தாரர்கள் வங்கிக்கு செலுத்த வேண்டிய கடன் தொகையை செலுத்ததவறியதால், குறிப்பாக கடன்தாரருக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் இதன்மூலம் அறிவிப்பது என்னவென்றால், மேற்படி சட்டத்தின் பிரிவு 13(4) மற்றும் விதி 8&9-ன்படி கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தினை **22.09.2023** தேதியன்று கீழே கையொப்பமிட்டவர் வங்கியின் சார்பாக உடைமையாக்கியுள்ளார்.

இது முதற்கொண்டு கடன்தாரரோ/ஜாமீன்தாரர்களோ மற்றும் பொதுமக்களோ இந்த சொத்தில் எந்தவிதமான வில்லங்கங்களும் ஏற்படுத்தக்கூடாது என்றும் அவ்வாறு ஏற்படுத்தினால் **அது கனரா வங்கி, மதுரவாயல்-II (16046) கிளை-க்கு** வர வேண்டிய கடன் தொகையான ₹ **10,05,348.42** (ரூபாய் பத்து லட்சத்து ஐந்தாயிரத்து முன்னூற்று நாற்பத்தெட்டு மற்றும் பைசா நாற்பத்திரண்டு மட்டும்) மற்றும் வட்டிக்கு, கட்டுப்பட்டவை என்றும் இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம்.

கடனுக்கு ஈடாக அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்தினை மீட்பதற்குரிய கால வரம்பு குறித்து சட்ட பிரிவு 13(8) ஷரத்துக்களின் மீது கடன்தாரர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது. (ஈடுபெற்ற சொத்து)

அசையா சொத்து விவரம்

மூலபத்திரதாரர் பெயர் Shri N சம்பத்குமார் மற்றும் N கார்த்திக். தென் சென்னை பதிவு மாவட்டம் மற்றும் குன்றத்தூர் சார்-பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட, சர்வே எண்.40, மனை எண்.38, சூர்யநாராயணா நகர் லே-அவுட் MMDA-ஆல் ஒப்புதல் பெற்ற PPD/LO எண்.140/93, 22.11.1993 தேதியிட்ட கூடிய எண்.LO/17548/93, திருவேற்காடு கிராமம், பூந்தமல்லி தாலுகா, திருவள்ளூர் மாவட்டம் என்றும் முகவியில் பொந்தமுள்ள தெற்கு பக்கத்தில் 2220 சதுர அடி நிலத்தில் 1020 சதுர அடி நிலம், தரைத்தளத்தில் 538 சதுர அடி மற்றும் முதல் தளத்தில் 639 சதுர அடி குடியிருப்பு கட்டிடம், அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: மனை எண்.3B-ல் உள்ள காலி நிலம், தெற்கு: சர்வே எண்.57, கிழக்கு: 30 அடி ரோடு, மேற்கு: மனை எண்.39.

தேதி : 22.09.2023
இடம்: சென்னை
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
கனரா வங்கி

அண்ணா நகர் மேற்கு கிளை
TNHB ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ், ஸ்கூல் ரோடு, அண்ணாநகர் மேற்கு விரிவு, சென்னை - 600 101
Ph: 094450 06353 E Mail: cb1834@canarabank.com

Canara Bank கனரா வங்கி

அசையா சொத்து சுவாதீன அறிவிப்பு [SECTION 13(4)]

பிணைக்காப்பு, நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்கச் சட்டம். 2002 மற்றும் பிணைக்காப்பு (செயலாக்க) விதிகள். 2002 ன் (Securitisation and Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest Act, 2002) (Act 54 of 2002) (hereinafter referred to as "the Act") மற்றும் விதி 3ன்படி (Security Interest (Enforcement) Rules, 2002) கீழ் **கனரா வங்கியின், அதிகாரம்பெற்ற அதிகாரியாக** நியமிக்கப்பட்டவரான கீழே கையொப்பமிட்ட அதிகாரி மூலம், மேற்படி சட்டத்தின் பிரிவு 13(12)-ன் கீழ் **கடன்தாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்கள்: 1.M/s விஜயலட்சுமி கேஷ்யூஸ் (M/s Vijaya Lakshmi Cashews),** எண்.144/145. ஆதியப்பா நாயக்கன் தெரு, ஜார்ஜ் டவுன், சென்னை-600001, **2.S.கிஷோர் குமார்,** ஃப்ளாட் எண்.3160, 3வது தளம், ப்ளாக் எண்.40, பழைய ப்ளாக் எண்.11 III-கட்டம், செக்டார் ஜீவன் பீமா நகர், அண்ணாநகர் விரிவு, சென்னை-600101 ஆகியோருக்கு **20.06.2023** தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட கடன் தொகையான ₹ **52,07,683.17** (ரூபாய் ஐம்பத்து இரண்டு லட்சத்து ஏழாயிரத்து அறுநூற்று எண்பத்து மூன்று மற்றும் பைசா பதினேழு மட்டும்)-ஐ அறிவிப்பு பெற்ற அறுபது நாட்களுக்குள் திரும்ப செலுத்த வேண்டுமென்று அறிவிப்பு அனுப்பப்பட்டது.

கடன்தாரர்/ஜாமீன்தாரர்கள் வங்கிக்கு செலுத்த வேண்டிய கடன் தொகையை செலுத்ததவறியதால், குறிப்பாக கடன்தாரருக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் இதன்மூலம் அறிவிப்பது என்னவென்றால், மேற்படி சட்டத்தின் பிரிவு 13(4) மற்றும் விதி 8&9-ன்படி கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தினை **20.09.2023** தேதியன்று கீழே கையொப்பமிட்டவர் வங்கியின் சார்பாக உடைமையாக்கியுள்ளார்.

இது முதற்கொண்டு கடன்தாரரோ/ஜாமீன்தாரர்களோ மற்றும் பொதுமக்களோ இந்த சொத்தில் எந்தவிதமான வில்லங்கங்களும் ஏற்படுத்தக்கூடாது என்றும் அவ்வாறு ஏற்படுத்தினால் **அது கனரா வங்கிக்கு** வர வேண்டிய கடன் தொகையான ₹ **53,49,801.22** (ரூபாய் ஐம்பத்து மூன்று லட்சத்து நாற்பத்து ஒன்பதாயிரத்து எண்ணூற்று ஒன்று மற்றும் பைசா இருபத்து இரண்டு மட்டும்) மற்றும் வட்டிக்கு, கட்டுப்பட்டவை என்றும் இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம்.

கடனுக்கு ஈடாக அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்தினை மீட்பதற்குரிய கால வரம்பு குறித்து சட்ட பிரிவு 13(8) ஷரத்துக்களின் மீது கடன்தாரர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது. (ஈடுபெற்ற சொத்து)

அசையா சொத்து விபரம்

மத்திய சென்னை பதிவு மாவட்டம் மற்றும் வில்லிவாக்கம் சார்-பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட **ஃப்ளாட் எண்.3160, III டைப், மூன்றாவது தளம், புதிய ப்ளாக் எண்.40, பழைய ப்ளாக் எண்.II, செக்டர் 1, ஜீவன் பீமா நகர், அண்ணாநகர் மேற்கு விரிவு என்னும் முகவரியில் 635 சதுர அடி குடியிருப்பு ஃப்ளாட்** மற்றும் அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: நிலம் மற்றும் கட்டிடம், தெற்கு: ப்ளாக் எண்.39, ஜீவன் பீமா நகர், கிழக்கு: தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய B.W.S. கட்டிடம், மேற்கு: 40 அடி அகல ஜீவன் பீமா நகர்.

இடம் : சென்னை
தேதி : 20.09.2023
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
கனரா வங்கி

மாண்புமிகு கடன் வசூல் தீர்ப்பாயம்-III
சென்னை-ன் முன்பாக
6வது தளம், கூடுதல் கட்டிடம், சாஸ்திரிபவன், ஹாடோஸ் சாலை, நுங்கம்பாக்கம், சென்னை - 600 006.

T.A. எண். 372 / 2023

பஞ்சாப் நேஷனல் வங்கி
(முன்னர் யூனைடட் பாங்க் ஆப் இந்தியா)
வட்டார சாஸ்த்ரா மையம், சென்னை
சென்னை - 600 002.
பிரதிநிதியாக அதன் முதன்மை மேலாளர் , ... மனுதாரர்

- எதிரிடை -

1. **திரு.V.சரணவணன்** த/பெ. திரு.S.வேலுபிள்ளை
36/38, B B சாலை, 2வது சந்து,
டாக்டர். நடேசன் சாலை, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005
2. **திருமதி.S.கௌசல்யா** க/பெ. திரு.V.சரவணன்
36/38, B B சாலை, 2வது சந்து,
டாக்டர். நடேசன் சாலை, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005
... எதிர் மனுதாரர்

மாற்று சேவை மூலம் எதிர்மனுதாரர்களுக்கான அழைப்பாணை

மேற்குறிப்பிட்ட பெயருடைய மனுதாரர் எதிர் மனுதாரர்களிடமிருந்து மேற்குறிப்பிட்ட விண்ணப்பத்தில் உள்ளபடி ரூ.18,07,872/- (ரூபாய் பதினெட்டு லட்சத்து ஏழாயிரத்து எண்ணூற்று எழுபத்து இரண்டு மட்டும்) வசூலிப்பதற்காக மாண்புமிகு கடன் வசூல் தீர்ப்பாயம் - III -ல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சாதாரண முறையில் அறிவிப்பிற்கான சேவை செயல்படாததால் மாற்று சேவையாக நாளிதழில் வெளியிட இந்த தீர்ப்பாயம் உத்தரவிட்டுள்ளதை தொடர்ந்து இந்த அறிவிப்பு நாளிதழில் வெளியிடப்படுகிறது.

ஆகையால் இந்த தீர்ப்பாயத்தின் முன்பு தாங்கள் நேரிலோ அல்லது தங்களால் அறிவுறுத்தப்பட்ட வழக்குறிஞர் மூலமாகவோ 30.10.2023 அன்று காலை 11.00 மணிக்கு ஆஜராகி தங்களுக்கு நிவாரணங்கள் ஏன் வழங்கக்கூடாது என்பதற்கான காரணத்தை எழுத்து பூர்வமாக அளிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.

தவறும் பட்சத்தில் விண்ணப்பம் / முறையீடு தாங்கள் இல்லாமலேயே சட்டப்படி தீர்மானிக்கப்படும்.

20.09.2023 அன்று எனது கையொப்பமிட்டு மற்றும் இந்த தீர்ப்பாயத்தின் முத்திரையின் கீழ் கொடுக்கப்பட்டுள்ளது.

பதிவாளர் கையொப்பம்

கடன் வசூல் தீர்ப்பாயம்-III, சென்னை
6வது தளம், கூடுதல் அலுவலக கட்டிடம், சாஸ்திரி பவன், ஹாடோஸ் ரோடு, நுங்கம்பாக்கம், சென்னை-600006

TRC எண்.41/2023

யூகோ வங்கி, தி.நகர் கிளை ...சான்றிதழ் வைத்திருப்பவர்
-Vs-
M/s.ஓம்காரா பிளாஸ்டிக் இன்டஸ்ட்ரீஸ், ...சான்றிதழ் கடன்தாரர்கள்

கோரிக்கை அறிவிப்பு
(1961, வருமானவரிச் சட்டம், இரண்டாவது அட்டவணை விதி 2-ன் கீழ் மற்றும் வங்கிகள் கடன் வசூல் & தொடர்பு நிலை சட்டம் 1993-ல் விதி 25 to 28)

பெறுநர்:
(1)M/s.ஓம்காரா பிளாஸ்டிக் இன்டஸ்ட்ரீஸ், சார்பில் அதன் உரிமையாளர்: சந்திரமோகன், எண்.12, மேரு நகர், 4வது குறுக